# விழி தீண்டும் விரல்கள்

## கவிதைத் தொகுப்பு



அமல்ராஜ்

# விழி தீண்டும் விரல்கள்

—— கவிதைத் தொகுப்பு ——

அமல்ராஜ்

வெளியீடு
புனித வெற்றி நாயகி ஆலய
பரிபாலனசபை
பேசாலை

நூலின் பெயர் :- விழி தீண்டும் விரல்கள்

ஆசிரியர் :- அமல்ராஜ்

விலை :- 100.00

முகவரி :- 8 வட்டாரம், பேசாலை, மன்னார்.

அச்சகம் :- ஸ்கை அச்சகம், புனித செபஸ்தியார் வீதி, மன்னார்.

உரிமை :- ஆசிரியருக்கு

வெளியீடு :- வெற்றிநாயகி ஆலயப் பரிபாலனசபை பேசாலை.

முதல் பதிப்பு :- 07-03-2010

தொடர்புகளுக்கு :- 077-5382544





## பொருளடக்கம்

1. பேசாலை ஊர்க்காரி
2. தூரத்து வெளிச்சம்
3. நம்பிக்கை
4. ஈ.வே.ரா. ராமசாமி
5. நீ பயணித்த சாலைகளில்.....
6. பூமிப்பெண்ணே
7. அப்பா
8. கனி - மாங்கனி
9. கருவாடு
10. முத்துக்குமார்
11. சிகரெட்
12. குடை
13. வானத்துச் சுவருக்கு
14. செருப்பு
15. மை

16. கரைவலை

17. தமிழன்

18. இ(ப்) போ(தே)ச(ா)என

20. மன்னார் மானிடரே

21. போர்வை

22. வாக்குறுதி

23. பொலித்தீன் பை

24. தமிழ் இருண்ட நாடு

25. சுருக்கு வலைக்கு போறமச்சான்

26. சாதி

27. ஏதிலியர்கள்


28. கற்பகத்தரு





# காணிக்கை

பள்ளிச் சாலையில்
பயணித்த பண்பாளர்களும்
அன்புத் தோழருமாய் வாழ்ந்து
மண்ணுக்கு முத்தாகி
கல்லறைப் பூக்களாய்
மணம் வீசும்
**அ. ரேமன் மஸ்கிரிஞ்ஞு.**
**கந்தையா கலைச்செல்வன்**
**தீ. லூக்காஸ் குரூஸ்**
ஆகியோருக்கு இந்தக் கவிதைப் பூக்களைக்
கண்ணீரால் காணிக்கையாக்குகிறேன்.



சுவாமி
ஜெறோம் லெம்பேட் அ.ம.தி.
இயக்குநர்
ஞானோதயம் - மன்னார்.

## ஆசியுரை

உலக மகா கவி டி.எஸ்.எலியட் கவிதைகளைப்பற்றி விவரிக்கும் போது கூறுவார், "கவிதை என்பது "Raid on inarticulate" வார்த்தைகளால் விபரிக்க முடியாதவை மீது மனிதன் தொடுக்கின்ற போர் அல்லது முற்றுகையே கவிதைகள்." மனிதனின் பரிணாம வளர்ச்சிப் படிகளிலே உறக்க நிலை, கனவு காணும் நிலை, இவைகளிலிருந்து மனிதன் விழித்தெழுந்த போது அவன் உள்ளத்தில் ஆழமான தேடல் எழுந்தது. அவன் தன் உணர்வும், சுய நினைவும் பெற்ற போது தான் யார்? தன்னைச்சுற்றியுள்ள இந்த இயற்கையும் பிரபஞ்சமும் என்ன? இவைகளுக்கு இடையே உள்ள தொடர்புகள் யாவை? என்ற அடிப்படையான வினாக்கள் எழுந்த போது இந்த ஆய்வு நிலைப் பிரக்ஞைகளின் வெளிப்பாடுகள், உணர்ச்சிகள் சார்ந்த உடல் மொழி சார்ந்த ஓசைகளாக, ஒத்திசைகளாக, சந்தங்களாக, தெறிப்புக்களாக வெளிப்பட்ட போது கவிதை, புதுக்கவிதையாக எழுந்தன,





***"விழி தீண்டும் விரல்கள்"*** என்ற கவிதைத் தொகுப்பின் ஆசிரியர் திரு. அமல்ராஜ் ஒரு இளம் பட்டதாரி ஆசிரியர் ஆவார். கலைவளமும் சமூகப்பற்றும் இவரின் தனித் தன்மைகளாகும். இந்தியாவில் படித்த காலத்தில் கல்கி, நந்தன் போன்ற சஞ்சிகைகளில் கவிதைகள் எழுதியதில் இவர் இலக்கியப்பணி ஆரம்பமாகியது. இவர் நல்லதொரு பட்டிமன்ற பேச்சாளரும்கூட, "பெற்ற தாயும் பிறந்த பொன்நாடும்' என்ற விதத்தில் நெய்தல் நிலத்தின் வாழ்வியல் நிலைகளைத் துல்லியமாக சிருஷ்டிக்கிறது.

**'பேசாலை ஊர்க்காரி', 'சுருக்கு வலைக்குப் போறமச்சான்', 'கரைவலை'** போன்ற கவிதைகள் கடலும் கடல் சார்ந்த மக்களின் வாழ்வியலையும் தொழில் முறைமைகளையும் அபிலாசைகளையும் அற்புதமாக அலங்கரிக்கின்றன.

"இயற்கையோடு இசைந்து வாழ்" என்ற வழியில் 'கனி' 'கற்பகத்தரு' 'பூமிப்பெண் போன்ற கவிதைகள் இயற்கையோடு இசைந்து களி நடனம் புரிகின்றன.

**விடுதலை, எதிர்பார்ப்பு, தமிழ்ப்பற்று, இலட்சிய தரிசனங்கள்,** போன்றவைகளுக்குக் கட்டியங்கூறுகின்றது.

எண்ணத்தில் எழுந்தவைகளை எழுத்து வடிவில் புனைந்து உலவ விட வேண்டும் என்ற ஆசிரியர் அமல்ராஜின் நீண்ட நாள் ஆசை உள்ளத்தில் சிறகடித்துப் பறக்கும் அழகை என்னால் உணர முடிகின்றது. சமுதாயம் தொடர்பான அதிகாரத்திற்கு எதிரான ஆவேசங்கள் அவரது கவிதைகளின் மையங்களாகின்றன.

கவிதை என்பது இன்பத்தில் இழையோடி அறிவூட்டுவதே என்ற வழியில் நின்று பல நல்ல சிந்தனைகளைப் புதுக்கவிதைகள் ஊடாகக் கூற விழைந்த ஆசிரியர் அமல்ராஜின் முயற்சிகளைப் பாராட்டி, அவரது இலக்கியப்பணி மென்மேலும் தொடரவும் மக்களுக்கு நன்மை பயக்கவும் இறைவனை வேண்டி ஆசி கூறுகின்றேன்.





## அணிந்துரை

### *விழிகள் தீண்டிய விரல்கள் கவிதைகள்*

### *மன்னாரின் இன்னொரு கவிதை முகம்! – மேமன்கவி*

சமீப காலமாக பல்வேறு சூழ்நிலைகளின் மத்தியிலும் மன்னார் பிரதேசத்திலிருந்து கலை இலக்கிய முயற்சிகளைப் பற்றிய அறிதல் கிடைக்கக் கூடியதாக இருக்கிறது.

விக்ரம் தீபநாதன், மன்னார் அமுதன், நானாட்டான் ஜெகன், தமிழ்நேசன் அடிகளார் போன்றோர் குறிப்பாகக் கவிதைத் தொகுப்புக்களை வெளிக் கொணர்ந்து ஈழத்து நவீனக் கவிதை வளர்ச்சியில் தங்களை அடையாளப்படுத்தி இருக்கிறார்கள். மன்னார் பிரதேசத்தைப் பொறுத்த வரை அதுவொரு கலை இலக்கியப் பாரம்பரியத்தைக் கொண்ட பிரதேசம். கடந்த காலத்தில் நவீன கலை இலக்கியம் வழியாகக் கலை இலக்கியப் பணிகள் செய்வதில் பின் நிற்காத ஒரு பிரதேசம். அந்த வரிசையில் **'விழிகள் தீண்டிய விரல்கள்'** எனும் இத்தொகுப்பின் மூலம் அமல்ராஜ் இணைகிறார்.

இன்றைய தமிழ்க் கவிதை வளர்ச்சிப் போக்கில் புதிய தலைமுறையினர் தங்களின் பங்களிப்பை வழங்கி வருகிறார்கள். இப்பங்களிப்பின் ஊடாகத் தமிழ்க் கவிதை செழுமை அடைந்திருப்பது இன்னும் சிலரால் ஒத்துக் கொள்ள முடியாத உண்மையாகவே இருக்கிறது. இச்செழுமைக்கு வெறுமனே அவர்கள் புதிய தலைமுறையினராக இருப்பது மட்டுமே காரணம் அல்ல, மாறாக அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த யுகமும், அது கொண்டு வந்து சேர்த்த அனுபவங்களும் காரணங்களாகின்றன. ஓர் இலக்கிய உருவத்தின் செழுமை என்பது வெறுமனே அதன் உருவச் செழுமையில் மட்டுமே தங்கிநிற்பதில்லை. அதனோடு அவ்விலக்கிய உருவத்தினூடாகப் பேசப்படும் விடயமும் பாரிய பங்காற்றுகிறது என்பது நாம் அறிந்த உண்மை.

அமல்ராஜ் வளர்ந்து வரும் கவிதைப் படைப்பாளி என்ற வகையில் கவித்துவம், மொழிச் செழுமை என்பன போன்ற அறிதலுக்கான பயணத்தில் நெடுந்தூரம் போக வேண்டியவர் என்பதனால், இத்தொகுப்பில் அவர் சேர்த்திருக்கும் கவிதைகளில் அவர் பேசி இருக்கும் விடயங்களிட்டே இக்குறிப்பில் அதிக கவனம் செலுத்தி இருக்கிறேன்.





அந்த வகையில் அமல்ராஜ் இத்தொகுப்பைச் சமீப காலத்தில் நம் கைக்குக் கிட்டிய மன்னார் பிரதேச நவீனக் கவிதைத் தொகுப்புக்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது கவித்துவம் மொழிச் செழுமை போன்றவற்றில் இத்தொகுப்பில் அடங்கியுள்ள படைப்புக்கள் சற்றுப் பின் தங்கி நின்றாலும், நாம் குறிப்பிட்ட மன்னார் பிரதேசத்தைச் சார்ந்த சமீப கால கவிஞர்கள் கவனம் செலுத்தாத, ஒரு சில புதிய விடயங்களைப் பற்றி இவர் பேசியிருக்கிறார் என்ற வகையில் இத்தொகுப்பு நமது கவனத்தைக் கவர்கிறது. இப்படி நான் கூறுவதன் மூலம், சமீபத்தில் மன்னார் பிரதேசத்திலிருந்து வெளிவந்த கவிதைத் தொகுப்புகள் பேசிய விடயங்கள் கவனத்திற்குரிய விடயங்கள் அல்ல என்பது அர்த்தமாகாது. அவர்கள் பேசாத சில விடயங்களை இவர் பேசி இருப்பதுதான் நமது கவனத்திற்கான காரணம்.

முதலில் இந்நூலின் தலைப்பையிட்டுச் சொல்லவேண்டும். ஒரு நூலின் தலைப்பு என்பது அந்த நூலில் உள்ளடங்கி இருக்கும் ஒட்டுமொத்தமான படைப்புக்கள் கொண்டிருக்கும் கருத்தியலை அடையாளப்படுத்தும் வகையில் அமையும் என்பது பொதுவான அபிப்பிராயம்.

இனி. எமது கவனத்திற்குரியதாகவும், சமீபத்தில் வெளிவந்த மன்னார் பிரதேச கவிதைத் தொகுப்புக்களிலிருந்து வேறுபடும் வகையில் இவர் பேசும் விடயங்கள் வேறுபட்டு அமைந்திருப்பதற்கான விஷயத்திற்கு வருவோம்.

இத்தொகுப்பில் அமைந்துள்ள கவிதைகளில், இவர் மன்னார் பேசாலை பிரதேசத்தைச் சார்ந்தவராக இருப்பதன் காரணமாக, அப்பிரதேசத்தின் தொழிற்றுறையான மீனவத் தொழிற்றுறை பற்றியும் அச்சூழலை வைத்துச் சில கவிதைகள் படைத்திருப்பது பாராட்டக் கூடிய அம்சம். அத்தோடு நில்லாமல் இத்தொகுப்பில் அமைந்துள்ள காதல் கவிதைகளிலும் கூட, மீனவத் தொழில் சார்ந்த உருவகங்களையும் படிமங்களையும் இவர் கையாண்டு இருப்பது மனதைக் கவர்கிறது.

**'பேசாலை ஊர்க்காரி''** எனும் கவிதையில்

**''பேசாலை ஊர்காரி**

**பேசாமப் போறியே**

**காள மனசிலே**

**திருக்கை வாலாய்**

**குத்தினவளே!''** எனத் தொடங்கி





**''நீ பார்த்த பார்வை**

**என்னை சுள்ளென்று**

**சுங்கானாய்த் குத்துதடி''**

என நகரும் அக்கவிதை முழுதும் மீனவச்சூழலில் உள்ள விடயங்களையே படிமங்களாகவும், உருவகங்களாகவும் கையாண்டு இருப்பதைக் குறிப்பிடலாம். அதே வேளை இவ்வாறாக அமைந்துள்ள கவிதைகள் அப்பிரதேச நாட்டார் பாடல்களையும் நினைவூட்டுபவையாக வெளிப்பட்டுள்ளன என்பதும் இங்கு குறிப்பிட வேண்டியிருக்கிறது.

**'சுருக்குவலைக்குப் போறமச்சான்'** எனும் கவிதையையும் அவ்வாறானதொரு கவிதையாகக் குறிப்பிடலாம்.

மீனவத் தொழிற்றுறை பற்றிய கவிதையாக அமைந்துள்ள **'கரைவலை'** எனும் கவிதையிலும் அவ்வாறான உருவகச் சித்தரிப்புக்களைக் காணலாம்.

இத்தகைய இவரது கவிதைகளில் நம்மால் அவதானிக்க முடிந்த இன்னொரு அம்சம் இவர் சிற்சில கவிதைகளில் முழுமையாக அல்லாவிடினும் ஓரளவுக்கேனும் இவர் கையாண்டிருக்கும் பேச்சோசைப் பண்புதான்,

ஈழத்து நவீன கவிதையின் வளர்ச்சியின் முக்கிய ஓர் அம்சமாகச் சொல்லப்படும் கவிதையில்

பேச்சோசைப் பண்பு என்பது, ஈழத்தின் தேர்ந்த பல கவிஞர்களால் கையாளப்பட்டு, ஈழத்து நவீனக் கவிதையின் தனித்துவப் பண்புகளில் ஒன்றாக இருக்கிறது. அவ்வாறான பண்பினை அமல்ராஜ் சிற்சில கவிதைகளில் கையாண்டு இருப்பது அவரது தனித்துவ உருவாக்கத்தின் தொடக்கமாக இருக்கிறது.

இத்தொகுப்பில் அமைந்துள்ள இன்னொரு கவிதை நமது கவனத்தை ஈர்க்கிறது. அக்கவிதை **'ஈ.வே.ரா. ராமசாமி'** எனும் கவிதை

பெரியார் ஈ.வே.ரா. அவர்களைப் பற்றிய அக்கவிதை சுவாரசியமான பன்முக வாசிப்புக்கு உட்படும் வகையில் அமைந்துள்ளது.

பெரியார் ஈ.வே.ரா. அவர்களின் சிந்தனைகள் இன்று 'பெரியாரியம்' எனும் ஓர் தத்துவச் சிந்தனையாக இன்று தமிழகத்தில் போற்றப்பட்டும், பேசப்பட்டும் வருகிறது. பெரியாரைப் பொறுத்த வரை வெறுமனே அவரை ஓர் பகுத்தறிவுவாதி எனும் குறுகிய சிமிழுக்குள் அடைப்பதற்கு மேலாக, பெண்ணியம், தலித்தியம் எனப் பல்வேறு போக்குகளைப் பற்றித் தீவிரமாகப் பேசிய சிந்தனை இயக்கவாதி அவர். ஈழத்துச் சூழலில், அவரைப் பற்றி நான் அறிந்த மட்டில் இன்றைய ஈழத்துத் தமிழ்க் கவிஞர்கள் எவருமே தம் கவிதைகளில் பேசியிருப்பதாகத் தெரியவில்லை.





அவ்வாறான நிலையில் அமல்ராஜ் அவரைப் பற்றிப் பேசியிருப்பது பாராட்ட வேண்டிய ஓர் அம்சம். நாம் ஏலவே குறிப்பிட்டது போல் பெண்ணியம், தலித்தியம் பற்றியெல்லாம் சிந்தித்தவர் அவர் என்பதை அமல்ராஜ் இப்படிச்சொல்கிறார்.

**சாதிய சாத்திய சாமி'**

**'தாயத்து கட்டாத**

**தாடி வைத்த சாமி''**

**'தாலி கட்டி வேலி போட்ட**

**பெண்ணினத்தின் நிலை மாறிடவே**

**காவியத்தில் கருத்துரைத்த நல்ல சாமி''** என்றெல்லாம் பெரியாரைப்பற்றி அக்கவிதையில் சொல்லியிருக்கிறார். **'ஈ.வே.ரா. ராமசாமி'** எனும் அக்கவிதையில் முழுக்க அமல்ராஜ் பெரியாரைச் சாமி என்றே விளிக்கிறார். சாமியை வெறுத்த, ஏற்றுக் கொள்ளாத அவரையே, அவரது இயற் பெயர் ராமசாமி என்பதற்காகச் சாமி என்று விளிப்பது முரண்நகையான ஒரு பிரதியாக இக்கவிதையை மாற்றுகிறது.

இவ்வாறாக வளர்ந்து வரும் ஒரு கவிதைப் படைப்பாளியான அமல்ராஜிடமிருந்து இவ்வாறான கவிதைகள் வருவது என்பது, இவர் தனித்துவமாகச் சிந்திக்க முயற்சிக்கிறார். என்பதை நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

இவ்வாறாகப் பல்வேறான விடயங்களைப் பற்றிக் கவிதையில் பேசியிருக்கும் அமல்ராஜ் மேலும் கவித்துவம், மொழிச் செழுமை என்பன பற்றிய தனது தேடலை விரிவாக்கிக் கொள்ளும் பட்சத்தில், அவரது கவிதைப் படைப்புக்கள் இலங்கைத்தமிழ்க் கவிதை உலகின் தீவிர கவனயீர்ப்புக்கு உட்படக் கூடிய சாத்தியத்தை உருவாக்கும் எனலாம்.

அவ்வாறான மேலதிகமான கவனயீர்ப்புக்குரியவராக அவர் வளர்வார் என்பதற்கு இத்தொகுப்பில் அவர் தன் கவிதைகளில் பேசியிருக்கும் விடயங்களும், அவ்விடயங்களைப் பேசி இருக்கும் முறைமையும் ஆதாரம் சேர்க்கின்றன என்பது மறுப்பதற்கில்லை.

***கவிஞர் மேமன்கவி***
***கொழும்பு***

memonkavi@yahoo.com





## மதிப்பீட்டுரை

திரு : S. டேவிட்
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
முசலி.

விரல்கள்தான் விழிகளைத் தீண்டுவது உண்டு. ஆனால், விழிகள் விரல்களைத் தீண்டியதாக நாம் கேள்விப்பட்டது இல்லை. ***"விழி தீண்டும் விரல்கள்"*** என்ற தலைப்பானது ஐரோப்பிய ஓவியர் பிக்காசோ தொடங்கி வைத்த நவீன ஓவியங்களில் மறைந்து கிடக்கும் உண்மைகளைத் தேடுகின்ற தேவையை உணர்த்துகின்ற வித்தியாசமான தலைப்பாய் உள்ளது. ஆனால், இந்தத் தலைப்பில் உள்ளே ஒரு கவிதைகூட இல்லை. இக்கவிதை நூலில் அடங்கியுள்ள அனைத்துக் கவிதைகளையும் தன்னுள் 'உறிஞ்சி' வைத்துள்ள ஆளுமைமிக்க வசீகரத்துவமான தலைப்பாக அட்டைப்பட முகத்தை அலங்கரித்து நிற்கின்றது.

இன்று சர்வேதேச அரங்கில் பிரபல்யம் அடைந்துள்ள பின் நவீனத்துவச் சிந்தனை ஊடாகக் கலை இலக்கியத்தை நோக்க முனைபவர்களுக்கு இக் கவிதைத் தொகுதியின் மகுடத்தின் வசீகரத்தன்மையை விளங்கிக் கொள்வது கடினமானதொன்றல்ல.

அவ்வாறாயின் **"விழி தீண்டும் விரல்கள்"** என்ற தலைப்பினுள் மறைந்துள்ள உண்மைதான் என்ன? ஒரு படைப்பாளன் அல்லது ஆக்க இலக்கியவாதிதான் சார்ந்து வாழுகின்ற சுற்றுச்சூழலில் தனது விழிகளால் ஆழமாகத் தரிசித்த பல்வேறு விதமான காட்சிப்படிமங்களையும் அனுபவங்களையும் உண்மைகளையும் அறிவுணர்வுகளால் உள்வாங்கி ரசனை உணர்வுடன் கைவிரல்கள் பற்றுகின்ற எழுதுகோலாய்த் தனது மொழிவளத்தைப் பயன்படுத்தித்தான் சேர்ந்துகொண்ட இலக்கிய வடிவம் ஒன்றின் மூலமாகப் படைப்பாக்கம் ஒன்றை வெளிக்கொணர்தல் என்று விளங்கிக் கொள்வது ஊடாகவே இளங்கவிஞன் அமல்ராஜின், **"விழி தீண்டும் விரல்கள்"** என்ற கவிதை நூலின் பக்கங்களை நிதானமாகப் புரட்ட முனைய வேண்டும்.

அமல்ராஜின் இக்கவிதை நூலின் ஒவ்வொரு கவிதைகளையும் ஆழமாக ஆய்வு செய்ய வேண்டிய பணி நூலை ஆய்வுசெய்ய வேண்டியவர்க்கு உரித்தானதாகும். எனினும் இக்கவிதை நூலில் உள்ள கவிதைகளின் பரிமாண வீச்சுக்களை மதிப்பீடுசெய்ய உள் நுழைந்த எனக்கு கவிதைக்குச் சொந்தக்காரரான அமல்ராஜின் சிவந்த சிந்தனைகள் கனிந்த உண்மையான அறிவுத்தளத்தை இனங்காண முடிந்தது. வேறுவார்த்தையில் கூறுவதாயின் அமல்ராஜின் கவிதைகளில்





அமல்ராஜ் என்ற மனிதனின் மனிதத்துவப்பண்புகள் பிரதிப்பலிப்பதைப் தரிசிக்க முடிந்துள்ளது.

இளங்கவிஞன் அமல்ராஜின் விழிகள் தீண்டும் விரல்களில் உள்ள கவிதைகளை விலாவாரியாக வாசித்த என்னுள் முகிழ்ந்த உணர்வுகளின் பிரதிபலிப்பான சாராம்சம் பின்வருமாறு

- இக்கவிதைகளைப் படைத்த படைப்பாளி ஒரு முற்போக்கு சிந்தனையாளன்.
- இக்கவிஞனின் சிந்தனை முனைப்புகள் மாக்சீய சித்தாந்தத்தால் வசீகரிக்கப்பட்டது.
- இக்கவிஞனின் சமுதாயநோக்கு பகுத்தறிவு சிந்தனை வயப்பட்டது. இவர் காண விளைவது பேதங்களுக்கு அப்பாற்பட்ட சமத்துவமான சமுதாயக் கட்டமைவு.
- பெரும்பாலான கவிதைகள் புதுக்கவிதை பாணியில் படைக்க முயற்சிக்கப்பட்டுள்ளது எனினும் புதுக்கவிதை வரையறைகள் வேண்டி நிற்கும் படிமங்கள், குறியீடுகளில் கூடிய கவனம் செலுத்தியிருக்கலாம்.
- இதனுள் அடங்கியுள்ள கவிதைகள் பல்வேறு பரிமாணங்களையும் பிரதிபலிக்கின்றன
- பொதுவான நோக்கில் அநேகமான கவிதைகள் கவியரங்கக் கவிதைக்குரிய கட்டுமானத் தகுதி நிலையைக் கொண்டுள்ளன.

- ஒரு சில கவிதைகள் நாட்டுப்புறப்பாடல்களைப் பிரதிப்பலிக்கின்றன. உதாரணம் **"பேசாலை ஊர்க்காரி" "சுருக்கு வலைக்குப் போறமச்சான்"**

- **'கருவாடு', 'தமிழர்', 'இருண்டநாடு'** போன்ற மணிக்கவிதைகள் ஜப்பானிய கவிதைவடிவமான ஹைக்கூ பாணியில் அமைந்துள்ளன. இதனை ஹைக்கூ கவிதை வடிவில் எழுத முனைந்த பரிசோதனை முயற்சியாகக் கருதலாம்.

- **'சிகரெட்'** உதிரிக் கவிதை நொடிக்கு விடை தேடும் முனைப்பின் வரிகளாக உள்ளன.

இத்தொகுப்பில் உள்ள பாடுபொருள்கள் வித்தியாசமான பண்புகளைப் பிரதிபலிக்கின்றன. சில இயற்கையை நேசிக்கின்றன.

சில கவிதைகள் இன உணர்வுடன் கூடிய தேசப்பற்றினைப் பிரதிபலிக்கின்றன. அவை அடக்கு முறைகளை எதிர்க்கத் துணிகின்றன.

**'அப்பா', 'ஈ.வே.ரா.', 'ஏதிலியர்கள்', 'முத்துக்குமார்',** போன்ற தலைப்பில் அமைந்த கவிதைகள் கவிஞர் அமல்ராஜின் இதயப்பீடத்தில் வீற்றிருக்கின்ற தகுதியானவர்களைக் குறிசுட்டிக்காட்டுகின்றன.





கற்பகத்தரு, கனி - மாங்கனி, பொலித்தீன்பை, செருப்பு, குடை, மன்னார்- மானிடரே போன்ற தலைப்புக்களில் அமைந்துள்ள கவிஞன் தேர்ந்துகொண்ட பாடுபொருள்களின் பல் பரிமாணச் சிறப்புக்களைத் தனது அறிவாற்றலைப் பயன்படுத்திக் காலக்கண்ணாடி ஊடாகத் துல்லியமாக நோக்கும் திறன் கவித்துவத்துக்கு அங்கீகாரம் அளிக்கும் விருப்பினைத் தூண்டுகின்றது.

புதிய கோணத்தில் காதலைப் பிரதிபலிக்கும் "பூமித்தாய்", "பேசாலை ஊர்க்காரி", போன்ற கவிதைகளில் கவிஞரின் கற்பனைவளம் உவமான உவமேய உருவகச்சிறப்புக்களைக் கையாளக்கூடிய திறன் போன்றன பிரதிபலிக்கின்றன. "தூரத்தில் ஒரு வெளிச்சம்", "சாதி" போன்ற கவிதைகளில் சமுதாயக் கட்டமைவில் புரையோடிப்போன சாதீய சிறைவிலங்கை நொறுக்க முனையும் கவிஞரின் சத்திய ஆவேசம் மேலோங்கி நிற்பதை அவதானிக்கலாம்.

"கரைவலை" என்ற தலைப்பில் பேசாலை மண்ணின் மைந்தர்களின் பொருண்மியத் தேடலுக்கு வலுச்சேர்க்கும் கரைவலை என்ற மரபுசார் தொழில்முறையின் உன்னதத்தையும் காலங்காலமாக அதனைக்கையாளும் தொழிலாளர்களின் உழைப்பின் பெருமையையும் சில வரிகளில் கவிஞர் சொல்ல விளைந்தாலும்,

"மீனவர்களின் இடுப்புக்கள்
வறுமையைக் கரை சேர்க்க
துடுப்புக்களாய் ஆடும்" என்ற ஆழமான உண்மை செறிந்த வரிகளும்

"கிளிஞ்சல் கூட
வாய்திறந்து இவர் வியர்வை
தேடி கரையின் மீது தவம் கிடக்கும்
துளிபட்டதும் முத்துச்சிப்பி
இங்கே தான் உருவெடுக்கும்"

என்று அமைந்த வரிகளுள் ஏழை மீனவர்களின் உழைப்பின் பெறுமானத்தையும் அவர்கள் சிந்தும் வியர்வை முத்துக்களின் பெறுமதியையும் உயர்வாக் மதிக்கும் மானிடநேய சிந்தனையும் இளங்கவிஞன் அமல்ராஜின் அறிவுத்தளத்தின் உண்மைத்தன்மையை வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றது.

ஆழ்கடலின் சிற்பிகளினுள் முத்துக்களின் உருவாக்கத்திற்கு விஞ்ஞான பூர்வமான விளக்கம் உண்டு. தொழிலாளர்களின் வியர்வைத்துளிகள் முத்துருவாக்கத்திற்குத் தகுதியானவை என கற்பனை நோக்கில் வர்ணிப்பது தனித்துவத்தின் வெளிப்பாடு எனலாம்.





புகழ்பெற்ற மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பயின்ற நாட்களில் தமிழகத்தின் நட்சத்திரக் கவிஞர்களான மு. மேத்தா, அப்துல்ரகுமான், வைரமுத்து, நா. முத்துக்குமார், இரா. வேலுச்சாமி, போன்றவர்களின் கவிதை நூல்களை விரும்பிப் படித்ததாக எனது நேர்காணலின் போது கூறிய அமல்ராஜின் தனித்துவ முனைப்புக்கு அக்கவிஞர்கள் மீதான 'ஏகலைவன்' வழிபாட்டின் தாக்கங்கள் இக்கவிதை நூலின் கவிதைகள் சிலவற்றில் தென்படுகின்றன.

அலைகடலுக்கு அப்பால் தமிழகத்தில் இருந்து முள்ளிவாய்க்காலில் நகர்ந்துகொண்டிருந்த எமது உறவுக்காகக் குரல்கொடுத்து தீயில் தன்னை ஆகுதியாக்கிக் கரியாகிப்போன இளைஞன் முத்துக்குமாரின் தியாகத்திற்குக் கவிதைவரிகளால் தலைவணங்கிய அமல்ராஜ், அந்த முள்ளிவாய்க்காலின் துயரங்களின் குறுக்கு வெட்டு முகங்களைக் கவிதை வரிகளில் இந்தநூலில் சேர்த்து இருக்கலாம்.

தமிழகத்தில் வாழ்ந்த காலத்தில் கல்கி, நந்தன் போன்ற வாராந்தசஞ்சிகைகளில் பத்துக்கும் மேற்பட்ட கவிதைகளை எழுதியதாக என்னிடம் கருத்துப்பகிர்வுத்

தகவல் வெளியிட்ட அமல்ராஜின் இத்தொகுப்பில் உள்ள பல கவிதைகளில் கன்னிமைத்தனங்கள் மேலோங்கி உள்ளன. தனது கவிதைகளைத் தொகுப்பாக்கம் செய்து வெளிக்கொணர்வதில் இது புதிய பிரவேசமாக அமைவதால் நாம் எதிர்பார்க்கின்ற கவித்துவ முதுமையை இது போன்ற இன்னும் சில பிரசவங்களின் ஊடாக அவர் பெற்றுக்கொள்கின்ற, கற்றுக்கொள்கின்ற பட்டறிவினைக்கொண்டு எதிர்காலத்தில் அவர் படைக்கப்போகும் கவிதைகளில் தான் நிச்சயம் எதிர்பார்க்க முடியும்.

📖 அட்டை முகப்பில் விழிஉறையின் (இமை) விளிம்பில் இறுகப்பற்றியிருக்கும் கரமொன்று வெளியே கிளம்பி வந்து வெப்பமான சிந்தனை ஒன்றுக்கு வார்த்தை வரிவடிவம் கொடுக்க முனைகின்றதோ என எண்ணத் தோன்றுகின்றது.

👍 தொகுத்து நோக்கும் போது,
சமுதாயத்தின் பல்வேறு தலங்களையும் ஆழமாக ஊடுருவிப் பார்க்கக்கூடிய, தனக்கிருக்கும் தகுதிநிலையை இந்த இளைய கவிஞன் ***"விழி தீண்டும் விரல்கள்"*** என்ற கவிதைத் தொகுப்பின் மூலமாக வெளிஉலகத்திற்குத் தெரியப்படுத்தி உள்ளான் எனலாம். எழுத்து ஆளுமை, ஆற்றல் நிறைந்த இந்த இளைய படைப்பாளி தனது விசாலித்த பார்வைகளால் கவிதைத் தளத்துக்குள் மட்டும் சுருங்கி நிற்காது, சிறுகதை, நாவல் போன்ற இலக்கிய வடிவங்களின் படைப்பாக்கங்களையும் வெளிக்கொணர முனைய வேண்டும்.





எஸ்.ஏ.உதயன்
எழுத்தாளர்,
8ம் வட்டாரம்,
பேசாலை.

## வாழ்த்துரை

வணக்கம்
மன்னாரின் எழுத்துலகு விழித்திருக்கின்றது என்று சொல்லுமளவிற்கு நூலுருவாக்கங்களும் வெளியீடுகளும் அடிக்கடி நிகழ்வதைக் கண்டு பாராட்டுகின்றேன். இப்போதுதான் இளைய ஆற்றலாளர்கள் சுதந்திரமாகப் பேசவும், எழுதவும் முன்வருகின்றார்கள். இத்தனை காலமும் எண்ணங்களில் நெட்டுருட்டிக் கொண்டிருந்த குமைச்சல்களும், குழப்பங்களும் ஏதோ ஒரு வகை இலக்கியங்களாக வெளிவருவதை நினைக்கும்போது மகிழ்ச்சியடைகின்றேன்.

அந்த வகையில் எனது இலக்கிய நண்பர் அமல் படைத்திருக்கும் **"விழி தீண்டும் விரல்கள்"** கவிதைத் தொகுப்பு இன்று வெளிவருவதையிட்டு இறும்பூதெய்துகிறேன். மானுடத்தின் பால் நேயப்பார்வை கொண்ட அமல் தனது கவிதைகளில் யதார்த்தம் பேசுகின்றார். கைவிடப் பட்ட கருத்துக்களை எடுத்து நிறுத்தி அற்புதம் தேடுகின்றார்.

செப்புகின்ற வார்த்தைகள் ஓரடுக்காய், ஈரடுக்காய் வளர்கின்ற போது கவிதை மட்டுமல்ல கருத்தும் பரிமளிக்க வேண்டும். குறை நிரப்பிகளாய் இடம்பிடிக்கின்ற கோக்குமாக்கு வரிகள் விலாசம் தேடுகின்ற இக்காலத்தில் இப்படி உணர்வின் வலியைக் கவிதையாக்கியிருக்கும் அமல் மாஸ்டரைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

என்னைப் பொறுத்தவரை ஆசிரியர் உலவி வருகின்ற உலகத்தின் பாங்கு வேறு வர்க்க சிந்தனையை வரித்துக் கொண்ட பகுத்தறிவாளன். சமூக மூடத்தை விமர்சனம் செய்யும் புரட்சிக்காரன். மானிடத்தின் கண்ணில் எறியப்படும் ஈட்டிகளுக்கு எதிரான கேடயக்காரன். நான் இந்தக் கவிதைத் தொகுப்பை ஒரு பார்வை பார்த்த போது முட்டிக் கொண்டு வந்த செய்திகளில் எல்லாம் ஒருவித பிரசவ வலிபோல் முக்கலும் முனகலுமாய் ஒருவித அவஸ்தை வியாபிப்பது போல் உணரமுடிந்தது. இந்த விழி தீண்டும் விரல்களில் அவரது சிவப்புச் சிந்தனை ஊடுருவுவதை அவரால் தவிர்க்க முடியவில்லை.

கல் சுமந்து, மண் சுமந்து, கட்டியெழுப்பும் கோபுரம் போலவே இன்று உயர்ந்து வரும் எழுத்திலக்கியம் கூர்மைப்பட வேண்டும். அதற்கு ஆர்வலர்களும், படைப்பாளிகளும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். உறக்கத்தில் காணும் கனவுகள் மரணத்தை மட்டும் சொல்லக்கூடாது, அது உயிர்ப்பையும் சொல்ல வேண்டும் என்ற முற்போக்குச் சிந்தனையோடு ஆசிரியரின் பேனா மடை திறந்து எழுத வேண்டுமென வாழ்த்துகிறேன்.





## என்னுரை

**"விழி தீண்டும் விரல்கள்"** கவிதைத்தொகுப்பை வெளியிடுவதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. நான் ஆசிரியனாக இருந்தபோதும் கவிதைத் துறைக்குள் நானொரு மாணவன் போல இருக்கின்றேன். கல்லூரிக் காலங்களில் தமிழ் நாட்டில் கல்கி, நந்தன் போன்ற இதழ்களில் சில கவிதைகள் எழுதியுள்ளேன். கல்லூரி விழாக்களில் கவிதைகளை படைத்திருக்கின்றேன். ஆனால், எமது நாட்டில் கவிதை எழுத முனைந்தபோதெல்லாம் அதற்குரிய சூழல் அமையவில்லை. எம்மினத்தின் துயரங்களைப் பக்கம் பக்கமாக எழுத முடியும். ஆண்டாண்டுகாலமாக நாம் பட்ட அவலங்கள், துன்பங்கள், ஆதங்கங்கள் எல்லாவற்றையும் கவிதைகளாகக் கொட்டியிருக்க முடியும். ஆனால், தக்கசூழல் அதற்குக் களம் அமைத்துத் தரவில்லை. இன்றும் அச்சூழல் பெரிதாகக் கைகூடவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆனாலும் கூட அத்துயரங்களை இத்தொகுதியில் ஓரளவு மௌன அழுகையுடன் சொல்லியிருக்கின்றேன். சமூகக் கட்டமைப்பில் காணப்படும் சாதித்துவத்தைச் சாடியிருக்கின்றேன். சாதாரணமாகச் சூழலில் காணப்படும் அற்ப விடயங்களைக் கூடக் கொஞ்சம் கவித்துவத்துடன் எழுதியிருக்கின்றேன்.

என்னைப் பொறுத்தவரையில் கவிதைத் துறை என்பது பெருங்கடல். அதில் இது ஒரு துளி. வாசகர்கள் இத்தொகுதியைப் படிக்கும் போது கருத்தியல் ரீதியாக மட்டுமே கவிதைகளை நோக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். இயன்ற அளவு சூழல் சார்ந்த, எம்மண் சார்ந்த விடயங்களை வெளிக்காட்டியிருக்கின்றேன். என் கண்கள் கண்ட விடயங்களை விரல்கள் தீண்டியிருக்கின்றன. அந்த வகையில் இப்படைப்பு என் உள்ளம் சார்ந்த, நான் நாடுகின்ற இடது சாரித்துவக் கொள்கையினை ஓரளவு தொட்டுச் செல்வதை இங்கே நீங்கள் காணலாம். இக்கவிதைத் தொகுப்பு மூலம் என் இனிய தாய்மொழி சிறப்படையுமாக இருந்தால் மட்டற்ற மகிழ்ச்சியடைவேன். இறுதியாக ***“வீழ்வது நாமாக இருந்தாலும் எழுவது தமிழாக இருக்கட்டும்”*** என்ற அசையாத நம்பிக்கையோடு இந்தக் கவிதையைத் தொகுத்துப் படைக்கின்றேன். இக்கவிதைத் தொகுப்பு உருவாக்கத்திற்காக என்னுடன் நின்றுழைத்த பெருந்தகைகளை நான் நன்றியோடு நினைக்கின்றேன். குறிப்பாக ஆலோசனை தந்து வழிகாட்டிய என் இலக்கிய நண்பர் எழுத்தாளர் S. A. உதயன் அவர்களுக்கும், கவிஞர் மன்னார் அமுதன் அவர்களுக்கும், ஊக்குவித்த எழுத்தாளர் தமிழ்நேசன் அடிகளாருக்கும், கவிஞர் எஸ்.வி. சிவகரன் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.






# பேசாலை ஊர்க்காரி

பேசால ஊர்க்காரி
பேசாமப் போறியே...
காளை மனசில
திருக்கை வாலால
குத்தியவளே...!

வாவல் மீனப்போல
வளவளப்பு
உடம்புக்காரி
சுறா மீனப்போல
சூப்பரடி உன்னழகு..!

நீ வளைஞ்சு நெளிஞ்சு
நடக்கையில வாளைபோல
வளவளப்பு

நீ பார்த்த பார்வை
சுள்ளென்று
சுங்கானாய்க்
குத்துதடி..!



சப்பாத்து மீன்
பாதக்காரி என்னை
பதகளிக்க
விட்டுடாத..!

காணாத காலத்தில
கட்டாக்குட்டி போல
ஒட்டி மனம் போகுதடி...

கல் வெட்டி தலைய
வீசுறதைப்போல
காதலையும்
வெட்டிடாத
என் காதலி...!

அயலை மீனைப் போல
பயலும்
புயலாக வந்தேனே!
கயல் விழி நீயும்
கண்டுக்காம போறியே!

நீ இல்லா வாழ்வு
சாவாளபோல
சப்பென்று போகுமடி
சிங்கி படபடத்து
ஆற்றாம
அடிக்கிறதப்போல
சம்மதமில்லாம
மனசு விம்மித்
துடிக்குதடி...







நாளாச்சி
நண்டு
கடிக்குமாப்போல
நறுக்கென்று
பதில் சொல்லுபுள்ள.....

வாட்டாள பிடிச்சது போல்
வாடிப்போய் நிக்குறேண்டி

சங்குக் கழுத்துக்காரி
பங்கம் வச்சுடாத
உன் காதலத்தான்
நினச்சேண்டி

ஓரா மீனப்போல
ஓரங்கட்ட நினைக்காத

பாரை பட்டது போல
பகட்டு நீயும் காட்டாத

கணவா கரியப் போல கருப்ப
நீயும் பூசாத
அஞ்சாலயா என்னக்கண்டு
அஞ்சாதபுள்ள - உன்ன
பொஞ்சாதியாக்காமா
கண்ணுரெண்டும் துஞ்சாது

சம்மதத்தைத்
சொல்லாட்டி
சாமி மீனு குத்தினதாய்ச்
சத்தம் போட்டுக் கத்துவேண்டி

பேத்தை ஊதிப் பெருத்த கனம்
பேதை மனம் கிடக்குதடி
ஆடிமாதம்
தேடித் திண்ணும்
கொழுப்பெடுத்த கொய் போல
ஓடி நானும் வந்தேண்டி

மணல போல
மடிதாண்டி
நிழலப் போல
அடிதாண்டி
பாய்ந்தோட மாட்டேண்டி







கடல் அட்ட போல
கூடநானு ஒட்டித்தாயிருப்பேண்டி

திருக்கையாக
வலக்கை கொண்டு
மணக்க நானும் வருவேண்டி
நட்சத்திர மீனைப் போல
நம்பியொளி வீசேண்டி!



# தூரத்து வெளிச்சம்

அரும்பு மீசையும்
அசையா உடற் தசையும்
விசையேறிய
விவேகம் கொண்ட
தீரன் அவன்

மதுவாக
மாது என்றும்
போதை தர வில்லை காண்

கண்ணுக்குள் வெட்டிய
முதல் மின்னலாய்ப்
பின்னளவள்

நங்கைதனை கண்டவுடன்
காளையவன்
புன்னகைதான் புரிந்தான்

பெயர் கேட்டான்
துயர் இன்றித் தயக்கத்துடன்
தமிழரசிதான் என்றாள்
பெயரில் மட்டும்தானல்ல
அழகிலுமேயென்றான்





"அம்மா" என்று
சும்மா சொல்லி
சட்டெனவே மறைந்தாள்

மறு நாளே
மடக்கென மன்னியதன் காதலை
மடல் மீதே தொடுத்தான்

அடுக்குமோ
இது நடக்குமோ என்றாள்

வடலிக் கூடலுக்குள்
விடலைகள் நாடி வந்து
கூடல் ஏதுமின்றி
காதல் தேடினார்கள்

உலவியது இச்செய்தி
ஊரில் பெரியோர் என
சங்கொலித்த சிலரோ
இனத்தால் இழிந்தவள் என்றனர்
சவரம்செய்யும் சாதிப்பெண்



விட்டுவிடு
தாலி கட்டக்கூட
கோயிலினுள்
எட்ட முடியாதென்றனர்
தீரனோ சட்டென
மட்டில்லா எடுப்பான

கேள்வி கேட்டான்
இனத்தால் நானும் அவளும்
தமிழரென்றான்
மதத்தால் மாறில்லா
கிறிஸ்தவரென்றான்
புறத்தால் வேறென்ன
புதினம் என்றான்

பட்டாடைகளுக்கோ
இவன் வார்த்தை
பன்னாடைகளாய்ப் போகவே
மறு கணமே
எட்டி வா தமிழரசி என்றான்

கட்டி முத்தமிட்டான்
நெற்றித்திலகமிட்டான்
கரத்தைப்பற்றி கத்திச் சொன்னான்
“இறைவன் தன் சாயலாக
மனிதனைப் படைத்தான்”
என்னுள் அவளையும்
அவளுள் என்னையும்
வைத்தான் இறைவன்





சமயமும் சாதியும்
சாதிக்கும் என்றால்
சண்டாளர்
சமயமே வேண்டாம் என்றான்
விட்டு விடுதலை காண்போம்
என்றே அன்னவள் கரம் பற்றி
புறப்பட்டான்
தூரமாய் வெளிச்சம் தெரிந்தது



# நம்பிக்கை

சுதந்திரக்காற்றை
சுவாசிப்போம்
என்பதில்
எனக்கு நம்பிக்கையில்லை....!

காணாமல் போன
கணவனும் மகளும்
கண் எதிரே
தோன்றுவார்
என்பதில்
நம்பிக்கையில்லை...!!

குண்டு வீச்சில்
குழந்தையும் குடிசையும்
சிதறிக்கிடந்த கோரமது
மறைந்து விடும்
என்பதில்
நம்பிக்கையில்லை...!

அம்மாவையும்
அப்பாவையும்
அடக்கம் செய்யக்கூட
அவகாசமின்றி
ஓடிவந்த ஆதங்கம்
அடங்கும் என்பதில்
நம்பிக்கையில்லை...!







இனவாதக்
கருத்துக்கள்
இல்லாமல் போய்
சனநாயகக் கருத்து
எழுச்சிபெறும் என்பதில்
எனக்கு நம்பிக்கையில்லை...!


வானத்திற்கு
நாம்
வர்ணம் பூசினாலும்
ஆமைகள்
அசுர வேகத்தில் ஓடினாலும்
குயில்கள்
கூடு கட்டினாலும்கூட
தமிழன்
தலையெழுத்து
மாறிவிடும் என்பதில்
நம்பிக்கையில்லை....!!

ஆனாலும் கூட
புத்தரும் காந்தியும்



பிறந்த தேசம்
மோசம் செய்து
என் இனத்தைத் துவம்சம் செய்து
இரத்தத்தில் அவர்களுக்கு
அபிசேகம் செய்தது
என்பது நம்பிக்கை

வகை தொகையின்றி
எம்மினம் வடித்த கண்ணீரால்
கடல் மட்டம் உயர்ந்தது
என்பது நம்பிக்கை



பாவங்கள்
போக்க
பாரினில்
வந்துதித்த
யேசு பாலகன்
இம்முறையேனும்
எம் அழுக்குகளை
அடிமைச்சங்கிலியை
அறுப்பார் என்பது
எனது
அசைக்க முடியாத நம்பிக்கை......!!






# ஈ.வே. ராமசாமி

உண்மையாக
வந்துதித்த
நல்லதொரு சாமி
ஈரோட்டில் பிறந்த
ஈவே ராமசாமி

பகுத்தறிவு படைச்சி
மூடத்தனம் உடைச்சி
முடக்கிய சாமி
பாப்பனர் பார்த்து பயந்து
ஒழிந்த சாமி

சாதிய சாத்திய சாமி
சூத்திரனைச் சுந்தரனாய்
ஆக்கிய சாமி
சண்டாளர் சாத்திரத்தைச்
சாடிய சாமி

தாயத்து கட்டாத
தாடி வைத்த சாமி
காவியுடைகட்டாத
கறுப்பாடைச்சாமி



ஆண்டவனைத் தேடுகின்ற
மனிதனுக்கு அண்டையில
நிண்ட சாமி
சாதிச் சண்டையில
சாகிற தமிழனுக்கு
மரமண்டையில
உரைத்த சாமி

இதிகாச நாயகரைப்
பரிகாசம் செய்த சாமி
சிலையான தலை மேலே
விலையான பாலூற்றும்
பாவிகளே... ஏழைக்
கலயம் மீது
ஊற்றடா ஊற்று என்று
ஊருக்குச் சொன்ன சாமி

தாலி கட்டி வேலி போட்ட
பெண்ணினத்தின்
இந்த நிலை மாறிடவே
காரியத்தின்
கருத்துரைத்த
நல்ல சாமி





சுய மரியாதை
திருமணத்தைப் புரிய வச்ச
நல்ல சாமி
தமிழர் அறிய வச்ச சாமி

காத்திரமான கருத்துக்கள
காலத்துக்குக் காலம்
கண்முன்னே வச்ச சாமி
நீங்க கூறியது
எதுவுமே பிழையில்ல சாமி



# நீ பயணித்த சாலைகளில்......!

நீ பயணித்த சாலைகளில்
நானும் காத்திருந்தேன்....!
உனக்காய்....
நீ
யார் வரவிற்காயப்
பார்த்திருந்தாய்...?
என்னுடன் பயணிக்க
நீ வேண்டும்
என்பதற்காய்....



தனித்து நின்றேன்
பல நாளாய் உனக்காய்
ஏகமாய்
வார்த்தையில்
தரித்திரமே
ஏனடா தரிக்கின்றாய்?
என்றுரைத்தாய் ஏளனமாய்..

முழுச்சொகுசு
வண்டிக்காய்
மும்முரம்
காட்டுகின்றாய்
என்றுதான் எண்ணி நின்றேன்.





காலங்களும்
காற்றாய்ப் பறந்ததுவே...

எனினும்...
வழி மேல் விழி வைத்துப்
பட்டணம் பயணித்த
அம்மா வரவிற்காய்ப்
பார்த்திருக்கும் பாலகனாய்க்
காத்திருந்தேன்.

பார்த்தவர்கள் கூறினார்கள்
முகவரியில்லா வண்டியில்
முண்டியடித்து ஏறினாயாம்...!

காலம் கழிந்த பின்
வந்தவர்கள் சொன்னார்கள்
கண்ணீர் ஊரில்
காலம் கழிப்பதாய்

ஏன் பெண்ணே.........!!



# பூமிப் பெண்ணே......

பூமிப் பெண்ணே!
நீ மழையவனுக்காகவா
இத்தனை நாள் பூப்படைந்து
காத்திருந்தாய்.....!

மாரியவன் மார்கழியில்தான்
வருவானோ?
வாரி வாரி - உன்னுடன்
அவன் புணர்வானோ?



புணர்ச்சி
உணர்ச்சி மயமானதோ..!
உன்னில் உரசியவுடன்
கன்னிப் பெண்களில்
காணாத கவர்ச்சியை
உடல் மிளிர்ச்சியைப் பெற்று விடுகின்றாயே!
உன் மினுமினுப்பின்
செழுமையின் சூட்சுமம்தான்
சொல் பெண்ணே?

மானிடரோ
சிவப்புக்கம்பளம் விரித்து
சிறப்பு விருந்தினரை
வரவேற்க – நீயோ





ஆடவனை
பச்சைக்கம்பளம் விரித்து
வரவேற்கின்றாய்!

ஓ...
அது மீண்டும்
பச்சைக் கொடியோ?
நீ
இச்சைக்கு ரெடியோ?
உன்னவனுக்கு உன்
உடல் பள்ளத்தில்தான்
அதிக மோகமோ, தாகமோ?
சரி!
எதுவாக இருந்தாலும்
அதுவாக இருந்தாலும்
வெள்ளத்தால்
நிரப்பி விடுகின்றானே!
உன் தாகத்தைத்
தண்ணீர் பாய்ச்சி
தணித்து விடுகின்றானே!

மடந்தையே
நீ
இடையிடையே மங்கலாகத்
தெரிவதென்ன?
ஓ...
அது மசக்கக் குணமோ?

.... ம்
அவன்
தழுவல்கள்
உயர்ந்த தனங்களின்
உச்சத்தையடைந்ததும்
மானிடர் மின்னலென
மிரண்டு விடுகின்றார்!

இடையிடையே அவன்
சத்தமாய்த்தரும்
முத்தங்களையும்
உச்ச உரசல்களையும்
உங்கள் சினுங்கல்களையும்
கண்டு இடியெனப்
பயந்து விடுகின்றார்களே?

நீங்களோ மானிடர் போல்
மறைவில் மகிழ்ச்சி கொள்ளும்
சுயநலவாதிகளல்ல

நீங்கள் வெளிப்படையாய்
மகிழ்ச்சிகொண்டு
எத்தனை
உயிர்களைத்தான்





எழுச்சி கொள்ள
வைக்கின்றீர்கள்!

ஆதவன்தான்
காதல் தூதுவனோ?
பாவம் சூதுவாது
தெரியாதவன்
உங்கள்
தேடலில்
ஒழிந்து விடுகின்றானே
ஒளியை
மறைத்து விடுகின்றானே

ஓ...
வெளிச்சம் போட்டுக்
காட்டும் விடயமல்லவே!

அது என்ன?
கலவி செய்த
கணப்பொழுதாகி
களைப்பு ஆறுவதற்குள்
மீண்டும், மீண்டுமாய்
வானவில்லெடுத்து
காமக்கணைதொடுக்க
எப்படித்தான்
முடிகின்றதோ?



வெள்ளையங்கி தரித்த
மேகன்
புனிதப்போர்வை
போர்த்தி
உன்னில்
மோகம்
கொள்ளமாட்டானோ?
உன் தேகம்
தேடமாட்டானோ?

கச்சிதமாய்க்
கறுப்பங்கியணிந்துதான்
காரியம் முடிப்பானோ!

கோடையிலாடவன்
வருகையின்றி
கட்டாந்தரை
மேனி வெடிப்புக்கள்
பசலை
நோயின் அறிகுறியோ?

மானிடர்க்கு
உங்கள் பிணைப்பில்
என்ன பிணி?
குடை பிடித்தே
தடைவிதிக்கின்றாரே!





காவாலிக் காற்று
மட்டும் என்ன?
துரோகமாய்
உறவைக்
கலைத்து விடுகின்றானே.

உங்கள் கூடல்கள்
அதிகமாகும் போது
வெள்ளமென மன்னனிடம்
மக்கள்
மனுக்கொடுக்கின்றார்கள்

அவர்களுக்கு
நிவாரணம்
நீங்களோ
நிர்வாணம்

வரட்டு
கௌரவம் பேசி
குருட்டு விஞ்ஞானத்தில்
வீழ்ந்த மானிடர்
பாவிக்கும்
மலட்டு மாத்திரைகளை
நீ பாவியாதே!

ஏனெனில்

உன் தாய்மைக்குக்

களங்கம் வரலாமா?

பெண்ணே! ஏனெனில்

நீ உலகத்தாய் அல்லவா!







# அப்பா

அப்பா
அப்பப்பா
திரையில் பார்த்த
முரட்டு மீசை வைத்த
வீரப்பா....!



உருவத்தால்
மடுவாய்
சிந்தனையில்
மலையாய்

முரட்டு ஆளெனினும்
வரட்டுக் கௌரவம்
கண்டதில்லை..!
வறுமையை வெறுமையாக்கக்
கற்றுத் தந்தாய்

குருட்டுச் சிந்தனையை
முரட்டுத்தனமாக விரட்ட
உன்னிடமே கற்றேன்
என்னை நீ புடம்போட்ட பொற்கொல்லன்
சுறுசுறுப்புக்கு
சலசலக்கும் நீரோடை
காலைக்கதிரவனைக்
கைலாகு கொடுத்து
அழைப்பவனும் நீயே....!
சேவலைக் கூவியழைப்பாய்

கல்வி வானில்
எனக்கு நீயே
முழு நிலவு....!
சுட்டியான குட்டி விஞ்ஞானி
பள்ளி மாணவரை சொல்லி
விருது பெற
சென்று அள்ளிவர உரமாகினாய்
விழுதாகினாய்
எழுத்துலகில் பழுத்த மேதை
அறிவுறக்கம் கண்டதில்லை



படித்த பட்டங்கள்
மட்டற்றவை
விவசாய ஆராய்ச்சியில்
கோலோச்சி
இலங்கை அரசை அசத்தினாய்
இருந்தும் தமிழன் என்பதால்
தரப்படுத்தப்பட்டாய்

ஆங்கில அறிவு
அதிகம் ஆழம் கொண்டவன்
எனினும்
தமிழுடன் அதைக் கலக்க மாட்டாய்
தமிழுக்குப் பிழை செய்ய மாட்டாய்
பழுதாய் நீ பொழுதைப்
போக்கியதில்லை
விழுதாய் இருந்தாய்
எனக்கு என்றும்
ஆசான் நீ
ஆதலால் இன்று ஆசானானேன்






# க னி - மா (ங்) க னி

ஆதியிலே
ஆதாம் ஏவாள்
பாவத்திற்கே
காரணமான கனி
இதனால்
மனித இனத்திற்கு ஏற்பட்டது
முதல் பிணி
இதனால் தொடர்ந்தது சனி

மாங்கனியே முக்கனி - உன்
சுவையோ தனி
ஆனால் நீ
செய்த குறும்போ இனி
ஈஸ்வரன் குடும்பத்தை
இரண்டாக்கி
வேலனை மலையேற வைத்து
அவனைக் கோலம்
காட்ட வைத்தாய்

பரமதத்தன் புனிதவதி
இல்வாழ்வை
இல்லாது செய்தாய்..!




கவிஞர்கள் நாவில்
அதிகம் பட்டாயோ?
சுவை விட்டாயோ?
தெரியவில்லை?

உன் வண்ணத்தை
வகை வகையாய்
வடித்துள்ளனரே!

கன்னியரை அவர்
கன்னத்தை - நெஞ்சில்
உள்ள எண்ணத்தை
விரிவாக எழுத முடியவில்லை!
என் எண்ணத்தை

கனியாய் நீ இருந்தால்
கன்னியர்க்கு உன்னைப் பிடிக்கும்
கன்னியர்க்குக் கன்னி கழிந்தால்
காய் இனிக்கும் கனி கசக்கும்

மங்கையர்க்கு
கறிப்பாடு தவறிவிட்டால்
தறி கெட்டுப் போகாமல்
உன் கனிதானே கட்சிதமாய்ப்
பழப்பாலாய் கிட்டிவிடும்
நாவில் ஒட்டிவிடும
வயிறோ முட்டிவிடும்









பழமாக நீ இருந்து
சில பிழைகள் செய்தாலும்
உன் இலைகள்
மனித இனத்தின் விலைகள்
இல்லை கலைகள்

விழாக்களில் சுப நாட்களில்
மங்கல கும்பத்தில்
கோலோச்சும் கோலாய்

கப்புக் காலுக்கு
மாவிலையும் நல்ல வேலாய்
அணியாய்த் தொங்கும்
தோரணத்திற்கு
தானும் ஒரு ஆளாய்
இருப்பது உன் இலைதானே!





# கருவாடு

உப்பான தண்ணீரில்

உப்பில்லா மீன் பிடிச்சு

உப்பிட்டு உலரவிட்டால்

கருவாடு





# முத்துக்குமார்

ஆழ்கடல் முத்தாக - நீ
இருந்தால் மாளிகையின்
அதிபதிகள் பலர் - தம்
சொத்தென்பாரே

அழகு ஆபரண
அட்டியலில் அணியாக்கி
அலங்கரித்துப் பூட்டியிருப்பாரே



ஐயகோ!
தமிழன் வித்து - என
வியக்க வைத்தாய்!

உடன் பிறப்புக்கள்
பித்தாகி நின்றபோதும்
தமிழுக்கு
நெத்தாகினாய்
சொத்தாகினாய்!!

நீ செத்து
இனத்துக்குச் சத்தாகினாய்
தமிழை விற்றுப்
பிழைக்கின்ற வீணர்கள் நிலத்தில்
விந்தை செய்தாய்
மனம் நொந்து செய்தாய்!!
நீ வெந்து செய்தாய்

ஈழத்தமிழன் நினைவு
கனவாகிப் போகுமென்றோ
கரியாகினாய் வரலாற்றில்
வரியாகினாய்!!

அண்ணா பிறந்த மண்ணில்
விண்ணாய்த் தெரிகின்றாய்

உலகத் தமிழன்
தலைவரென ஊனக்கதிரையில்
உலவி வரும் பொழுது
ஏளனமே பேசி எட்டி உதைத்தாயோ!
உன் உயிரை மயிர்தானென்று
வெட்டி முறித்தாயோ
முத்தம் தந்தோம் - உனக்கு
விடை கொடுத்தோம்

மலைக்கின்றோம்
உனக்காய்
விலையாய்
எதைக் கொடுப்பதென்று







# சிகரெட்

என் அனுமதியின்றி

எனக்குத் தீயிட்டார்கள்

மறு கணமே


திக்குமுக்காடுமளவிற்கு

முத்தமிட்டார்கள்.......!


நான் சுதாகரித்துக் கொள்வதற்கு முன்

என்னை பாதத்தால்

பதம் பார்த்தார்கள்....!



# குடை



பூமியவள்
பெற்ற குடை
இது மானிடர் போல்
வர்ண பேதமில்லா
வெள்ளைக் குடை
நல்ல சொர்ணக் குடை

மானிடர்க்குப் புரத உணவாகும்
உடலுக்கோ உரமாகும்
கொழுப்பேறிய மக்களுக்கு
கொழுப்பில்லாக்குடை சாப்பாட்டுக்குடை
நோக்காடில்லாக் குடை

தடையில்லாமல்
நடை பாதையிலும்
விலையில்லாமல்
கிடைக்கும்குடை
இதை லேசா எடை போடக்கூடாதுங்க

மழையால் விளைகின்ற குடை
மழையை தடை பண்ணாத குடை
அட இதுதாங்க காளான் குடை
ஆனால் ஆறறிவு அமைச்ச குடை







மழையும் வெயிலும்
காற்றும் காக்கும்குடை
இது சாமிக்கும்
பிடிக்கும் குடை
சிலரோ சாதிக்கும்
பிடிக்கும் குடை
அதனால் எதுவுமே
சாதிக்காத குடை

கன்னியர்கள் கவர்ந்த குடை
இதை பிடிப்பதால்
சில பருவப் பெண்களின்
உரிய நடை
விடை பெறுங்க
கடற்கரையில்
காதலர்கள் பிடிக்கும் குடை

கசமுசா காட்சியெல்லாம்
கண்டகுடை
ஆத்தாடி அம்மாடி மனிதனால்
பாவப்பட்ட குடை
வயது வந்தவர்களுக்கென
வயதெல்லை போடவேண்டிய குடை

நாதியில்லா வியாபாரிக்கு
வீதியோரக் கடைக்குதவும் குடை

பள்ளிப்பாலகர்களுக்கும்
பரிசாகும் குடை
பயணிகள் பழுதாகாமலிருக்கத்
தரிப்பிட நிழற்குடை

அந்தக்கால அரசர்களெல்லாம்
பிடிச்ச குடை
இந்தக் கால
ஆண்டியும் பிடிக்கும் குடை

நிழற்படத் துறைக்கும்
திரைப்படத்துறைக்கும்
குறையில்லாப் படம் பிடிக்க
உதவும் குடை

பெரிசுகள் சில கக்கத்துக்குள்
வைத்தே கன்றாவியெல்லாம்
மணந்த குடை

மதுசாலையில்
மழைத்துளி விழுந்து
மதுவினுள் மயங்காதிருக்கப்
பிடிக்கும் குடை

வணிகக் கடைகளில்
தன் பணிகள்





முடியவில்லையென்பதற்காய்த்
தணியாத தாகத்துடன்
தலை கீழாய்த் தொங்கும்
மிச்சக்குடை, சொச்சக்குடை
கைப்பிடிக்குள்
மெய்யடக்கும் குடை

தள்ளாடும் தாத்தவிற்கும்
தலைகாக்கவும் தளர்நடை போக்கவும்
ஏற்றகுடை

குடைக்கு விடை கொடுத்து
வீடு வந்தால்
மடையாய் உடைப்பெடுக்கும்
வார்த்தை மழைங்க

மாரி மழை
ஓய்ந்தாலும்
இந்த வார்த்தை மழை
வாரி வாரி பெய்யுங்க

ஈழத்தமிழரெல்லாம்
ஒரு குடையில் அணி திரள வேணுமுங்க
ஆட்சி பிடிக்க வேணுமுங்க

சுயநலமழையில்
நனைந்தால்
ஜன்னி வந்து சாவோமுங்க
எண்ணிக் கொஞ்சம் பாருங்க

குடையென அழைத்தால்
உங்க உதடுகூட
குடையாய் மாறுமுங்க
கொஞ்சம் சொல்லிப்பாருங்க







# வானத்துச் சுவருக்கு

வானத்துச் சுவருக்கு
வர்ணம் பூசியது யார்?
சொட்டை சொட்டையாய்
வெள்ளைப் பூச்சு
மொட்டைத் தூரிகையோ?
சாரம் கட்டி
பூரணமாகா வேலைகளோ

மேஸ்திரி இல்லா வேலைகளோ?
மோசமாய்க் கிடக்குதே!
வர்ணக் கலவை இல்லையோ?
சொர்ணமின்றி கிடக்குதே!




# செருப்பு

செருப்பு! உனக்குப்
பல பொறுப்பு
உன் அழகில் பல இருப்பு
இப்போதெல்லாம்
விலையோ
மலைபோல் வியப்பு
அதனால்தானோ உன் மீது
ஏழைகளுக்கு வெறுப்பு

காலுக்குக் கவசம்
கல்யாணக் கச்சேரிகளிலும் -
கருமாதிவீடுகளிலும் நீ
துவம்சம்

காய்க்காத மரத்திற்கு
கண்திருஷ்டி நீதானோ!
கட்டையான குட்டையனை
நெட்டையாக்கும் வித்தைக்காரன்

பாதங்கள் நோகாமல்
பணிகள் செய்கின்றாய்
தார்ச் சாலையில்
வேகாதணி செய்கின்றாய்







பாட்டாளியைப் பணக்காரக்
கூட்டாளியை
காலில் வைத்து
கணிப்பிடுவாய்
கருவியாய்

கன்னியரின் ஆயுதமாய்க்
கடைசிவரை துணை நிற்பாய்
ஜோடி பிரிந்தாலும்
ஒன்றின் நாடி முடிந்தாலும்
இங்கொன்றாய் அங்கொன்றாய்த்
தேடிப்பிடித்திடுவார்
ஏழைகள் சமத்துவம் செய்திடுவர்
கூடவே சாதி சமத்துவம் செய்திடுவர்

கழுத்தை வாருவது
மனித குணம்
காலை வாருவதை
அவனிடமே கற்றாயோ?
ஆதலால்தான்
நீ கடிப்பதாகவும்
கதையளக்கின்றனர்

மனிதனைவிட நீ மாபாவியா?
கடவுளைக் கண்ணில்கூடக்
காட்டுவதில்லையே

ஆனாலும்
சரித்திரத்தில்
விசித்திரம் நடந்திருக்கின்றது
இராமனின்
காலணியாய்க் கோலோச்சி
அரசாட்சி புரிந்ததாக
இராமாயணம் சாட்சியளிக்கின்றதே!

இன்றோ புலனாய்வில்
புதிய பரிணாமம்
தடயமாய் - நீ
தருவது பல விடயமாம்
ம்....
இறுதியில் தமிழன்
மட்டும் உன் பெயரை
சிறப்பாக்கியிருக்கின்றான்!

பதவிக்காய்ப் பணத்திற்காய்
தன் இனத்தை விற்று
மாற்றான் காலில்
செருப்பாய்த் தேய்கின்றானே....!







இருந்தும் சம்சாரம் கூடத்
தராத பாதுகாப்பை
மின்சாரத்திடமிருந்து
தருகின்றாய் ஆகவே நீ
பார் - அணி
முழுமையான பூரணி



# மை

கையிலுள்ள மை

காயுமுன்னே

அடுத்த தேர்தல்

மையம் கொண்டது

மையும் பொய்யாகிப் போகுமோ

பொய்யும் மெய்யாய்ப் போகுமோ






# கரைவலை

குழுவாய் நின்று
மனித வலு கொண்டு
பாங்குடனே இழுப்பர்

வாழ்வுதனை முன்னோக்கப்
பின்னோக்கி
பாதம் அது நகரும்

மீனவர் இடுப்புகள்
வறுமையைக் கரை சேர்க்கத்
துடுப்புக்களாய் ஆடும்

ஏட்டில் இல்லா
பாட்டுக்கேட்டு
ஆழி தாளம் போடும்
குழி நண்டு கூடவந்து
துடி நடனமாடும்



கள்ளக்கெழுறு
கரையில் நின்று
இசைத் துள்ளல் கேட்டு
தலையாட்டும்
கடல் ஈரக்காற்று
இவர் தேகம்
தேடிக் காயும்

இரும்பு மேனி
துரும்பாயாகிக்
கவலை கொண்டிழுக்கக்
கடலலையும் அதுபாட்டில்
கரை விழுந்து
வெண்ணுரையைக்
கற்பிதமாய்த் தள்ளும்

கிளிஞ்சல் கூட
வாய் திறந்து
இவர் வியர்வை தேடி
கரையின் மீது
தவம் கிடக்கும்
துளி பட்டதும்
முத்துச்சிப்பி
இங்கேதான்
உருவெடுக்கும்

கடல் ஆமை இவர்
மெய்யின் வேக
உண்மை காண
கரையில் வந்து





பார்க்கும்
பிறக்கும் குட்டி
இவரின் பாதம் பட்டு
கதி வேகம் பெற
குழிகளிட்டு
முட்டை போட்டுச் செல்லும்
இதன் திட்டம் கூட வெல்லும்

பாட்டாளி கூட்டத்தின்
உணவு ஊட்டம்
இங்கே நடக்கும்

கார்ல் மார்க்ஸின்
கனவுகூட
நனவாகி இங்கே நடக்கும்

# தமிழன்

எண் பார்த்து
பெயர் வைத்தான்
தமிழன் - அது
மண் என்றாலும் மகிழ்வான்
இரு தேகம் சேர்ந்த
நாள் பற்றி
எண்ணாத் தமிழன்







# இ(ப்) போ(தே)ச(ா)என


(1995.10.25 நான் மயிரிழையில் உயிர் தப்பிய நினைவாக)

இ.போ.ச
வண்டியை இடைமறித்தே
இ(ப்) போ(தே) சா என
அதிரடியாய்ச்
சட்டெனப்
பட்டெனப்
பட்டுத்தெறித்தது
சுற்றிக் கணன்றது
சன்னங்கள்
கெஞ்சியே – அஞ்சியே
தஞ்சம் தராமலே
விஞ்சிய
வெறிக்கோலங்கள்



ஆண்டவனே ஐயகோ!
ஆண்டவனே என
அலறிக்கேட்டிடும் அவலங்கள்
தலைப்பிரசவக் காரியாய்த்
தரணியே அதிரும்
தாங்க முடியா ஓலங்கள்

பிரசவக் குருதியின்
பிரளயத்தில்
புரண்டது போல
ஐந்து வயதே ஆகும்
குஞ்சுகளின்
வலிக் கோரங்கள்



பல் நறும்பியே
சொல் கறும்பியே
கிழியென
முறியென
காறி
உமிழென
இன வெறி காட்டிய கோரங்கள்

கற்கால மனிதரும்
இக்கால மனிதரும் கேட்டிடா
ஏட்டில் எழுதிடா
காட்டொலிகள் - ஐயா
தீட்டொலிகள்

வஞ்சகர் விஞ்சினர்
வெஞ்சினர் ஆகினர்
சட்டென சட்புட்டென
சரிந்து விழுந்தன
மட்டற்ற
மனித உடலங்கள்





களனியில் கட்டிய
மடையது சடுதியாய்
உடைத்தது
கடுகதியென
ஓடிய குருதி வெள்ளம்

செத்த பிணங்களோ
கஞ்சியாய்ப் பஞ்சியாய்

மிஞ்சிய உடல்களில்
முக்கி முனங்கிடும்
முனங்கல்கள்

பட்டப் பகலினில்
பஞ்சமா பாதகம்
அஞ்சிடாமலே
நடந்தேறிய கொடுமை

பயங்கரவாதிகள்
பயணித்த ஊர்தியாம்
பதம் பார்க்கப்பட்டதாம்
பக்கம் பக்கமாய்
எக்கச்சக்கமாய்க்
கொட்டை எழுத்தினில்
கட்டமிடப்பட்ட
காலைச் செய்திகள்

# மன்னார் மானிடரே

மன்னாரை
எண்ணுவோர்க்கு
முகவரியானேன் - நான்
மண்ணோர்கள் மகத்துவம் புரிவாரோ?
அதை அறிவாரோ?

அழுக்கு மூட்டை சுமந்து
மிடுக்காகி நிற்பேனே
ஆடை அழுக்கென்றதை
சுலபமாய் எண்ணாதீர்
பாவ அழுக்குப் போக்க
பாரினில் வந்துதித்த
பரமன் ஏசுவையும்
தாய் மரியாளையும்
சுமந்தவன் நான்தானே

சுகமான சுமைகளிவை
கனமாக நினைப்பதில்லை
அன்னை மகத்துவத்தை
அறிந்தவரே என்னை
அறிந்ததுண்டா?





சேய்க்குச் செடிபிடித்தால்
நோய் நொடி பிடித்தால்
நான் முகர வேண்டுமாம்
பால் வார்க்க வேண்டுமாம்

விட்டையில் கூட விடயமுண்டாம்
வணிகக் கடைகளிலும்
சேதி சொல்லுவார்
படம் பிடித்தும்
என்னை ஆணியில்
அழகாய் மாட்டிடுவர்
கண்ணீரும் ஓட்டிடுவர்

இஸ்ராயேல் மக்களுக்கு
நான்தானே மாபெரும்
சொத்தானேன் அவர்களுக்கு
முத்தானேன்

சரீரம் முழுவதும் சாம்பல் நிறம்
வாக்குரைக்கும் வாயோ
புனித நிறம்
மனிதனிதைப்
புரிய வேண்டும்.
கத்துவதாய்க்
கதையளக்க வேண்டாம்
உம் காதில் உரைக்கவே
காற்றில் நிறைக்கின்றேன்.

மன்னார் மானிடரே!

மகத்துவத்தை அறியுமையா

அழிந்து வரும்

எம் இனத்தைக் காக்க

வழி கூறுமையா!







# போர்வை

செத்த பிணம் மீது
சில நாய்கள்
நாசுக்காய் நக்கும்....
அது நாகரிகமென
நம்பும்படி சொல்லும்....!

பட்டுத் தாம்பரம் போர்த்தி
பகட்டும் காட்டும்
துர்மணம் வீசாதிருக்க
நறுமணம் பூசும்
உரிமைக்காய்
உயிர் துறந்தோர்
உண்மை மாற்றி
உளறித்திரியும்.........

சலுகைக்காய்ச்
சன்மானத்திற்காய்
சலவாய் வடிக்கும்
வேட்டுச்சத்தம் ஓய்ந்ததால்
ஒய்யாரமாய்
ஓட்டும் கேட்கும்....!

உண்மைத் தமிழுணர்வில்

தீப்பொறி பறக்கும்

கொடுக்கு முளைத்து

அவர் உடலைக் கிழிக்கும்

வேடிக்கையாய்ப் போச்சே - ஐயகோ

தமிழனுக்கு வாடிக்கையாய்ப் போச்சே....!!







# வாக்குறுதி

அரசியல் கோமாளிகள்

மக்களோ ஏமாளிகள்

அறிவிக்கா வாக்குறுதியாய்

ஐந்தறிவு ஜீவன்களுக்கே

பசி தீரும்

அவைகளுக்கே

ருசியாகும்

வண்ண வண்ண

நிறங்களில் குசியாகும்

# பொலித்தீன் பை

அறிவியல் ஆய்வினால்
ஆக்கிய ஆலமே...
அகிலத்தை
ஆட்கொண்ட அழியாத
அரக்கனே – நீ

அதிர்வில்லா
அணுகுண்டு
அதிகம் பேசப்படாத
ஆபத்தே நீ

சாக்கடையின்
ஊக்கமே
நோக்காட்டின்
ஏற்பாடே

உழவனுக்கு உபத்திரவமே
உக்கா உடல் உடையோனே
பாரமில்லாப் பயங்கரமே!
பாலகனும் தூக்கும்
பாவனையே





தோட்டத்திற்கெல்லாம்
வேட்டே....!
வேகவைத்தாலும்
வேதனையே

கால் நடைகளுக்கும்
காலனே
உலக சுகாதாரத்தின்
உலையே

விலை கொடுத்து வாங்கும்
கொலையே!
ஒப்பாரியில்லாப்
பிணமே

பாலான பாரை – நீ
சேறாக்க வந்தாயோ?
பூக்கடையான
பூமியை வேக்காடாக்கி
வேதனை தர வந்தாயோ?



# தமிழ் இருண்ட நாடு

அறிஞர் அண்ணா
இட்டபெயர் தமிழ் நாடு
அவர் துயில் எழுந்தால்
துயருடன் இட்டிடுவார்
தமிழ் இருண்ட நாடு







# சுருக்கு வலைக்கு போற மச்சான்


சுருக்கு வலைக்குப்
போற மச்சான் - வாக்கு
சறுக்காம வந்திடுங்க

அலவாக்கரை போல
ஆறாம நானிருக்கேன்..
அந்தியில வந்திடுங்க - நேரம்
பிந்திடாம வந்திடுங்க

மடி நிறைய மீனைப்பிடிச்சிடுவ - இந்த
மச்சா கழுத்த - எப்ப
நிறச்சிடுவ?

காணாத காலத்தில்
கருவாட்டுப் பப்பப்போல
காயுதையா என் மனசு

தாழை மரத்தடியில்
தனியாக பேசையில்
கன்னத்தில தந்த முத்தம்
காத்தால காஞ்சி போச்சு
கன்னி மனசு
இன்னமும் காயலயே



மச்சம் பிடிப்பவர்க்கு
மிச்சமில்லையாமா?
மச்சான் நீ இருக்கையில
லெட்சம் எதுக்கையா?

நீ போன ஆழி மேல
நானழுத
நிலைபார்த்து
மீன்களெல்லாம்
இமையிரண்டும் இழந்ததுவே
விழி மூடாதிருந்ததுவே!

கமிலசு வாடியில
கருவாட்டு மீனு வெட்டி
காசு அல்லோ வச்சிருக்க
கால் நாட்டப் பார்த்திருக்க...!


கடற்கரை நண்டு கூட
நிலம் தோண்டி கூடு சேரும்
இந்தக் குமர - நீ
எப்பதான் கூடு சேர்ப்ப?
உன் சோடி சேர்ப்ப
சொல்லு மச்சான்?







நம்மினமோ
நாய்போல
நரபலியில் செத்துப் போச்சு
முத்தாக நாலு மூணு
பெத்தாக வேண்டாமா?
அத சொத்தாக்க வேண்டாமா?
அத வித்தாக்க வேண்டாமா?
கூறு மச்சா?



# சாதி

தமிழன் சாதி எப்போது
பேதி ஆகும்?
பாதி இனம்
இச்சேதி அறியா மாண்டதுவே
மீதி இனமாவது
நல் சோதி வழி நடக்குமா?

ஆரியன் செய்த சூழ்ச்சி
இதுதான் இன்றுவரை
எம் இனத்தின் வீழ்ச்சி
பாரதியும் பாட்டால்
இதைப்பாடினான்...!

பெரியாரும் இதை
பகுத்தறிவால்
பறை சாற்றினார்....!

பாரதியின் பின் வந்த
தாசனும் இதை
கவிதையால் தீட்டினான்...!

ஆனாலும்
சண்டாளர் செய்த
சதிவலை - எமக்கு







நோக்காடாய்ப் போனதே....
இது சாக்காடாய் ஆனதே....!

கூப்பாடு போட்டு இனி
என்ன செய்வது
எப்பாடு பட்டாவது
நிப்பாட்ட வேண்டாமா?

நீ சாதிச் சமூக வலை - அறு
காதல் திருமணம் - பெறு
ஆரியன் கருவறை - வெறு
இது நிகழ்ந்தால்
தமிழன் வெற்றி பெறுவான் - பொறு...!!

# ஏதிலியர்கள்

ஏதிலியர்களாய்
இரண்டாண்டுகள்
பட்டது போதும் என்று
நாடு திரும்பி
நாட்டமாய்
நண்பர் கூட்டம் தேடினேன்

மீசையும் தாடியுமாய்ப்
பருவம் பயிர் செய்திருந்தது
கல்லூரிக்காலம்
கடந்த வயது



உயர் தரம் படிக்க
ஊக்கம் தராத மனது
ஏக்கமாய்ச் சில பதில்கள்
ஊக்கமாய்ச் சில விடைகள்
கடுகதியாய்
நடையுடனே
காகிதப் பைகள் கனத்தன கைகளில்

வெற்றிமா ஆலயத்தினூடே
பற்றிமா எம் பாடசாலை நோக்கி
கணீரான குரலில்
இலக்கணப் பேச்சில்
தம்பிகளா படிக்கவா?
மாட்டீன் மாஸ்டர் மடக்கினார்





தோரணமான பேச்சு
வாரணமாய் வந்து மோதிச்சி
காரணம் பல சொன்னோம்
கனத்த மனதுடன் அனுமதியும்
பலத்த இடைவெளியின் பின்
பல ஆண்டுகளும்
ஒரு ஆண்டு
பருவம் தப்பிய மழையாய்
ஒன்றாய்க் கலந்தோம்

காலத்தின் காட்டாற்றில்
கலைந்தன கனவுகள்
காற்றாய்ப் போன காதல்
தேளாய்க் கொட்டிய வலிகள்
கல்வியுடன் கலந்தே கற்றோம்

உழைக்க வேண்டிய வயதில்
ஊனமானோம்
கல்வியின் காத்திரத்தைத்
துல்லியமாய் அறிந்த வயது
திருமறையின் பொருள் மறை துலங்க
பொருளாதாரமே நிலையான ஆதாரமென
அறிவூட்டினாள்
பேரில் மட்டுமல்ல
கல்வியிலும் ரதியான ரீச்சர்



அரசியல் ஆழத்தை
தமிழனின் தலை எழுத்தை
கட்சிதமாகக் கற்றுத்தந்தார்
கியூபேட் ஆசான்

தாய்த்தமிழை
என் இனிய மொழியை
தரமாகவே நல் வரமாகவே
கற்பித்தனர்
றெஜிமாவும் அகுந்தாவும்
அருமையான ஆசான்கள்

ஓராண்டில் ஈராண்டுப் படிப்பை
இரவு பகலாய்க் கரைகண்டோம்
பெறுபேற்றில் உயர் நிலை கொண்டோம்

தகரக் கொட்டகை
சிட்டுக்களின் கூடாரமானது
சிலநாட்களில்
பெறுபேறுகள் சிறகு விரிக்கச் செய்ய
பல்கலைக் கழகத்திற்கும் உரிய
பதவிக்குமாய்ப் பணிக்கப்பட்டோம்

இன்றோ நிறைவான பதவியுடன்
ஆசானாய் தபால் அதிபராய்
தொழிநுட்பவியலாளராய்
நாமும் சமூகத்தில்
அடுத்த தலைமுறைக்குக்
கைலாகு கொடுத்துக்
கரைசேர்க்கக் காத்திருக்கின்றோம்......!!





# கற்பகத் தரு



கற்பகத் தரு - இதை
வெட்டிச்சாய்ப்பதை
மன்னார் மானிடனே!
மறுகணமே தடு

மரந்தானே என்று
எப்படிக் கூறுவாய்?
மரத்துப்போன மனம் கொண்ட நீ

தரணியில் தரமான
பெயர் கொண்டது
எம் மண் கண்டது

காட்டுத்தனமாக
காரணம் பல சொல்லி -
காடழித்த நீ
வீடென விடயம் சொல்லி
வீழ்த்துவதோ எம் நிலத்தைத்
தாழ்த்துவதோ?


பனை பொருளாதாரத் துணை
இதை நினை
கூறவா இதன் குணத்தை
இது தரும் பணத்தை
பொருளாதார வளத்தை

எழுதவா ஏராளம்
தாராளம்
இங்கில்லை வார்த்தை ஜாலம்

மாரியில் மழை தடுக்க
குளிர் விடுக்க
ஏழைகளின் கூரைகள்
வேயும் ஓடாய்
இது இருந்தால்
கோடையில்
கொளுத்தும் வெயிலிலும்
வெளியில் - நீ நாடாய்

பன்னவேலைகளைப்
பட்டியல் போட்டால்
ஏராளம் கன்னிப் பெண்களும்
பின்னும் பரிசுப் பொருட்களும் தாராளம்

சுறுசுறுப்பாய்ப்
புடைக்கும்
பெண்படைக்குச்
சுளகாகும்
பாட்டாளிக்கும் அவன்
கூட்டாளிக்கும் -







வீட்டின் விருந்தாளிக்கும்
சாயெனப் பாய்ந்து வரும் பாயாய்

ஒட்டியிருக்கும்
நெட்டையான மட்டையும்
திட்டமுடன் வெட்டினால்
வேலி கட்டவும்
மடியில் காசு கொட்டவும் செய்யும்

மகத்தான பாளையைப்
பதம் பார்த்தால்
மானிடர் மயக்கும்
மதுவாகும்
பக்குவம் செய்தால்
விக்கினமில்லா
வினாகிரியாய்
பதநீராய்ப் பரிசளிக்கும்
பாலகரும் குடிக்கும்
பாலாகும்
காலம் கொஞ்சம் கனிந்தால்
சர்க்கரையாய்ச்
சாகசம் செய்யும்
ஏழைகளின் குவளைகளின்
தேநீராய்க் குதூகலிக்கும்
நாவுகளில் இது இனிக்கும்

கட்டான கன்னிப் பருவக்
காயை நுங்கென்பர்
இதையருந்தினால்
நீரோடை - அடா!
ஏனடா குளிர்பானக்கடை

பருவமடைந்த
பனம்பழமோ
பசியாறவும்
ருசியாகவும்
பனாட்டு பணியாரமாகவும்
பக்குவமாய்ப் பஞ்ச காலத்தில்
தஞ்சமாய்ச் சலவை செய்ய
சரியான சன்மானம்

மிகுதியான வித்தோ
விலையான முத்து
அதை நெத்தாக்கி
நிலத்தில் நிரலிட்டால்
குத்திக் கிழித்திடும்
நித்திலத்தை
காலாண்டு நாட்களில்
கோலூன்றும் பச்சை றிபன் கட்டி
காக்கிச் சட்டை மாட்டி
பாதாள இராணுவமாய்
அணிவகுக்கும்





படைபடையாய்ச்
சத்தான கிழங்கைப்
பௌவியமாய் அவியலிட்டால்
பலநாள் பகலுணவு
பாடுபட்டு பதனிட்டால்
ஒடியலாகும்
காசுபணமோ என்
கையிலாகும்

வித்து செத்த பின்பு
கொட்டையென்பர்
அதுவும் உள்ளிருக்கும் சதையோ
சாப்பாடாகும்
மிச்சமுள்ளதோ கூந்தலாகும்
நெற்றிக்கண் திறக்க வைத்ததல்ல
விறகிற்காய் - சமையல்
உறவுக்காய் ஆகும்

தமிழ் வீரன்
சேர மன்னன்
அரச பூவும் இதுவாகும்
நாமும் பூசிப்போம்
நாளும் யோசிப்போம்
பனைதனை நேசிப்போம்

மண்பற்று மனிதருக்கு
மாத்திரமன்று
மரத்திற்குமுண்டு

# நன்றி நவில்கின்றேன்


- இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய மேமன்கவி ஐயா அவர்கட்கும்,
- ஆசியுரை வழங்கிய சுவாமி ஜெரோம் லெம்பட் அவர்கட்கும்
- அறிமுக உரை வழங்கிய மதிப்புக்குரிய அதிபர் திரு. F.S.D லெம்பட் அவர்கட்கும்
- ஆய்வுரை வழங்கிய கோட்டக்கல்வி அதிகாரி திரு.S. தாவீது அவர்கட்கும்
- வாழ்த்துரை வழங்கிய எழுத்தாளர் திரு. S. A. உதயன் அவர்கட்கும்
- இணையத்தளத்திலிருந்து பொருத்தமான படங்கள் வழங்கிய திரு. ஞா. சொர்ணம் பர்னாந்து மற்றும் ஆசிரியர் S. நாதன் அவர்கட்கும்
- எனக்கு ஊக்கம் தந்த திரு. S. நிசாந்தன் ஆசிரியர், திரு. X. ஏனஸ்ட் குரூஸ் ஆசிரியர், திரு. S. செல்வேந்திரன் அவர்கட்கும்
- கணனி அச்சுக்குதவிய கவிஞர் S. ஜெகன் அவர்கட்கும்
- ஒப்புநோக்கி உதவிய ஆசிரியர் திரு J. பிரின்சிலி றெவல், ஆசிரியர் திரு. M. சிவானந்தன், ஆசிரியர் திரு. M. அமலானந்த குமார் அவர்கட்கும்
- வெளியீட்டுக்கு ஊக்குவித்த மன்/பரப்பாங்கண்டல் அதிபர் திரு. S. விஸ்வராசா அவர்கட்கும்
- விளம்பர உதவி வழங்கிய ஆசிரியர் திரு. S. ஆனந்தநாயகம் லியோன், மன்னார் அமுதன் மற்றும் பேசாலை வளர்கலை மன்றம்
- நூலை சிறப்புற ஆக்கித்தந்த ஸ்கை அச்சகத்தாருக்கும் அதன் பணியாளர்களுக்கும்
- நூலை வெளியிட்டு உதவிய பேசாலை புனித வெற்றிநாயகி ஆலய பரிபாலன சபைக்கும்

**உளம் நிறைந்த நன்றிகள்**



ஆசிரியர் திரு. J. அமல்ராஜ் றெவல் அவர்களைப் பற்றி இச்சிறிய அறிமுகவுரைக்குள் அடக்கவதென்பது அசாதாரணமானதொன்றுதான். இவர் பேசாலையும், வங்காலையும் சேர்ந்து ஈன்றெடுத்த ஒரு வளமான கலைவயே எனலாம். ஆரம்பக்கல்வியிலிருந்து உயர்தரம் வரை பேசாலை மன் / பத்திமா மத்திய மகாவித்தியாலயத்தில் கற்றார். தன் உயர் கல்வியை மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் கலைத்துறையில் பயின்றார். உயர்தர வகுப்பிற்கு அரசியலை கற்பிக்கும் ஆசிரியராக எமது பாடசாலைக்கு காலடி எடுத்து வைத்தாரெனினும் சகல துறைகளிலும் சளைத்தவர் அல்ல என்பதனை மிகக் குறுகிய காலத்திற்குள் நிரூபித்துள்ளார். பட்டிமன்றம், பேச்சு, கவிதை, நாடகம், இசை என்று எத்துறைகளிலும் இவர் விட்டு வைக்கவில்லை. சீரழிந்துகொண்டிருக்கும் தமிழின் சரியான உச்சரிப்பினை இன்றும் அவரிடம் நீங்கள் தெளிவாக கேட்க முடியும். ஒரு ஆசிரியராக முன்வந்து மேலதிக பொறுப்புக்களை ஏற்கும் மனப்பக்குவம் அவரிடத்தில் உண்டு. தன் சமூகத்தின் உயர்வுக்காக தன்னுடைய பங்கினை சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் தாமாக வழங்க வேண்டும் என்கிற தாராள மனப்பான்மையும் கொண்டவர். பேசுகின்ற எவரையும் தன் வசீகர புன்னகையால் நட்பின் எல்லைகளுக்குள் இழுத்துச் சென்று விடக் கூடியவராகவும், வெளிப்படையாகவும், சகஜமாகவும், அனைவரோடும் பழகக்கூடிய பண்புள்ளவராவார். மன்னார் மக்களின் நலனுக்காக கல்வியிலும், மருத்துவத்திலும் , விவசாயத்திலும் அதிக அக்கறையோடு செயற்பட்டு வரும் தன் தந்தையையும் இத்தொகுப்பின் மூலம் அவர் நினைவுகூற வைத்திருக்கிறார். இவரின் கவிதைகளை பார்க்கின்றபோது இது இவரது முதலாவது தொகுப்பு என்பதனை நம்ப முடியாதிருக்கும். வார்த்தைஜாலங்களுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்காமல் சிறந்த நல்ல கருத்துக்களை ஒரு நல்ல கவிஞனாக செதுக்கியெடுத்திருக்கின்றார் . சோர்ந்து கிடக்கின்ற எந்த மனதையுமே தட்டியெழுப்பும் முனைப்போடு இக்கவிதைகள் எழுதப்பட்டிருக்கின்றன. இக்கவிஞர் தனது இலக்கினை அடைய வேண்டுமென வாழ்த்துவதோடு இறையாசிரையும் வேண்டி நிற்கின்றேன்.

**திரு. F.S.D. லெம்பேட்**
**அதிபர்**
**மன்/ அல்மினா ம.வி**
**தாராபுரம்**

Printed by: Sky Printers, Mannar. T.P: 023-2251210